நீதி அமைச்சின் சுற்றறிக்கை 1/2008(ii)

எனது இல. : MOJ/E10/மே.நீ./2022
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு
கொழும்பு 10.
2023 மார்ச் 17

சகல மேல் நிதிமன்ற நீதிபதிகள்,
சகல மாவட்ட நீதிபதிகள்,
சகல நீதவான்கள்,
சகல தொழில் நியாய சபைகளின் தவிசாளர்கள் யாவருக்கும்,

<u>காவலாளிகளை சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் மேலதிக நேரத்துக்கு அங்கீகாரம் வழங்கல்.</u>

காவலாளிகள் மற்றும் நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர்களை காவல் கடமைகளில் ஈடுபடுத்துவது தொடர்பான மேலதிக நேரக் கொடுப்பனவுகளை அங்கீகரிப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2022.05.06 ஆம் திகதிய 1/2008(i) இன் இலக்க நீதி அமைச்சின் சுற்றறிக்கையின் 4.2 பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

“4.2 காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர் ஆகிய ஒரு ஊழியரேனும் கடமையில் ஈடுபடாத நீதிமன்றங்களில் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்படும் சகல ஊழியர்களுக்கும் ஒரு மாதத்திற்கு உச்சளவாக 490 மணி நேரத்திற்கு உட்பட்டு மேலதிக நேரம் செலுத்துவதை அங்கீகரிக்கின்றேன்”

02. நீதி அமைச்சின் 1/2008(i) இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளும் போது நீதிமன்றங்களினால் அடிக்கடி வினவப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் பின்வரும் விளக்கங்களை சமர்ப்பிக்கின்றேன்.

2.1 காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர் ஒவ்வொரு வாரமும் 06 நாட்கள் சேவையாற்ற வேண்டும் என்பதுடன் ஞாயிறு மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களும் வழமையான கடமை நாட்களாக கருதப்படல் வேண்டும் என்பதனால் அவர்களின் ஓய்வு நாட்கள் தவிர ஏனைய அரசாங்க விடுமுறை நாட்களில் அவர்களின் கடமை முறையின் போது மேற்கொள்ளப்படுகின்ற கடமைகளுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு உரிமை இல்லை.

2.2 நீதி அமைச்சின் 1/2008(i) இன் 4.1 பிரிவுக்கு அமைய ஒரு சேவை முறையில் 9 மணி நேரத்திற்கு மேலாக மேற்கொள்ளப்படுகின்ற மேலதிக கடமைக்காக ஒரு காவலாளி/ நீதிமன்ற பாதுகாப்பு அலுவலருக்கு ஒரு மாதத்திற்கு உச்சளவாக 144 மணி நேரம் என்பதற்கு உட்பட்டு மேலதிக நேரக் கொடுப்பனவை செலுத்தும் ஆற்றல் உள்ளது. 2015.07.29 ஆம் திகதிய நீதி அமைச்சின் சுற்றறிக்கை 04/2015 மூலமும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளவாறு தகுந்த திட்டமொன்றை தயார் செய்து அதற்கமைய ஊழியர்களை காவல் கடமைகளில் ஈடுபடுத்த திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

2.3 போதியளவு எண்ணிக்கையில் நீதிமன்ற பாதுகாப்பு அலுவலர்கள் சேவையாற்றுகின்ற நீதிமன்றக் கட்டிடத் தொகுதிகளில் 08 மணி நேர கடமை முறையை அமுல்படுத்த திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

03. அரச செலவின முகாமைத்துவம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளை தீவிரமாகப் பின்பற்றி காணப்படுகின்ற ஏற்பாடுகளின் வரையறைகளுக்குள் செலவினங்களை முகாமைத்துவம் செய்து கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை செலுத்துவதை மேற்கொள்ளல் வேண்டும் என்று கடுமையாக வலியுறுத்துவதுடன் இதற்கு மேலதிக ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுப்பது மேற்கொள்ளப்பட மாட்டாது.

04. இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் 2023.03.20 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும்.

**கையொப்பம் /**
**செயலாளர்,**
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.

பிரதிகள் :
01. செயலாளர், நீதிச் சேவைகள் ஆணைக்குழு
02. பிரதம நிதி அலுவலர், நீதி அமைச்சு